Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annamenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road, Madurai-625 001.

மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 217 | உள்ளூர் - 05.08.2026 | புதன்கிழமை | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com
Madurai Edition | *Vol 55 | * Issue 217 | வெளியூர் - 06.08.2026 | வியாழக்கிழமை | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com

"சாவான் மாதத்தில்" அதிர்ஷ்டம் பெறும் 4 ராசிகள்!

புதன்தோறும் கொட்டிக்கிடக்கும் வேலைவாய்ப்புகள்!

வாட்ஸ்அப்பில் புதிய மாற்றம்!

ரெப்போ வட்டி மாற்றமில்லை..! ஆர்பிஐ..!

## தமிழக பட்ஜெட் 2026-27

# வருவாய் பற்றாக்குறை ரூ.55,775 கோடி!

# மொத்த கடன் 10.98 லட்சம் கோடி






## முக்கிய அம்சங்கள்...!!

சென்னை, ஆக. 05–

நடப்பு நிதி ஆண்டுக்கான (2026–27) பொது பட்ஜெட்டை தமிழக நிதியமைச்சர் மரிய வில்சன் தாக்கல் செய்தார்.

தமிழக சட்டப்பேரவையில் நடப்பு நிதி ஆண்டுக்கான(2026–27) பொது பட்ஜெட்டைத் தாக்கல் செய்து, நிதியமைச்சர் மரிய வில்சன் உரை நிகழ்த்திய நிதி அமைச்சர் மரிய வில்சன், "முதல்வர் விஜய் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற இந்த குறுகிய காலத்திலேயே பல துறைகளில் கனிசமான முன்னேற்றங்களும், மக்களின் நம்பிக்கையை பிரதிபலிக்கும் பல முயற்சிகளும் நடைபெற்று வருகின்றன.

தமிழக வெற்றிக் கழகத்தின் வெற்றி என்பது ஒரு கட்சியின் தனிப்பட்ட வெற்றி அல்ல. ஒட்டுமொத்த தமிழக மக்களின் வெற்றி அது. மக்களின் நலன்களுக்கான பல திட்டங்களை செயல்படுத்தும் நோக்கில், நமது அரசு அறம், பொருள், இன்பத்தை நோக்கமாக வைத்து 10 தூண்களைக் கொண்ட 'வெற்றித் தமிழகம்' தொலைநோக்கு திட்ட ஆவணத்தை வெளியிட்டுள்ளது.

அதன் அடிப்படையில் திட்டங்களை அடுத்து வருகிற முதலாம், மூன்றாம், ஐந்தாம் ஆண்டுக்குள் நிறைவேற்றத்தக்க திட்டங்களை வகைப்படுத்தி, அவற்றுக்கு செயல் வடிவம் கொடுத்து வருகிறது" என்றார்.

தமிழ்நாடு அரசின் சொந்த வரி வருவாய் ரூ.2,54,575 கோடியாக உள்ளது. 2026–27ஆண்டில் மாநில வருவாய் பற்றாக்குறை ரூ.55,775 கோடி இருக்கும் என கணிப்பு. தமிழ்நாடு அரசின் மொத்த கடன் 10.98 லட்சம் கோடி ரூபாய் என நிதி அமைச்சர் மரியவில்சன் அறிவிப்பு...

தொடர்ந்து அவர் பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டார்.

அவற்றின் விவரம் வருமாறு:

> சென்னை மாநகரின் அனைத்து நுகர்வோருக்கும் ஸ்மார்ட் மீட்டர்கள் வழங்கப்படும். மாநிலத்தில் பிற பகுதிகளில் 50 லட்சம் தொழில், வணிக நுகர்வோருக்கும் இத்திட்டம் விரிவாக்கம் செய்யப்படும்.

> டெல்டா மற்றும் டெல்டா அல்லாத மாவட்டங்களில் நெல் சாகுபடியினை ஊக்குவிக்க குறுவைத் தொகுப்புத் திட்டம் செயல்படுத்த ரூ. 5.134 கோடி ஒதுக்கீடு.

> வேளாண் மற்றும் உழவர் நலத் துறைக்கு 14,984 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

> தமிழ்நாடு செயற்கை நுண்ணறிவு அமைப்பு (TN AI Mission) மூலம் சுகாதாரம், விவசாயம், கல்வி, குடிமக்கள் சேவைகள், நகர்ப்புர நிர்வாகம் மற்றும் சமூகநல நிர்வாகம் போன்ற துறைகளிலும் தேவையான இதர துறைகளிலும், செயற்கை நுண்ணறிவு சார்ந்த முன்முயற்சிகளில் தனித்த கவனம் செலுத்தும்

> கோயம்புத்தூர் – அரியலூர் 765 கே.வி. மின் பகிர்மானப் பாதைத் திட்டம் ரூ.4,000 கோடி செலவில் செயல்படுத்தப்படும்.

> அனைத்து இ–சேவை மையங்களும் 'இ–சேவை 2.0' ஆக மேம்படுத்தப்படும். அதிவேக இணையம் கூடுதல் மக்கள்நல சேவைகள். நம்ம அரசு WhatsApp Chatbot சேவைகள் 76–இல் இருந்து 275 ஆக விரிவாக்கம் செய்யப்படும்.

> செயற்கை நுண்ணறிவு, தகவல் ழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறைக்கு 398 கோடி ரூபாய் ஒதுக்கீடு.

> 'வீட்டுக் கூரை சூரிய மின் மானியத் திட்டம்' அறிமுகம் செய்யப்படுகிறது. இதன் மூலம் சூரிய மின்பலகைக்கு ரூ.1 லட்சம் வரை மானியம் வழங்க ரூ.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

> செயற்கை நுண்ணறிவு (AI) தொழில்நுட்பத்துடன் கூடிய இணையவழி திட்ட அனுமதி தளம் (Single Platform for Efficient Expedited Development – SPEED) அறிமுகப்படுத்தப்படும்

விரைவான, வெளிப்படையான திட்ட அனுமதி வழங்க ரூ.40 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

> எரிசக்தித் துறைக்கு 15,828 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

> 24,131 அடுக்குமாடிக் குடியிருப்புகள் இவ்வாண்டில் நிறைவு செய்யப்படும். 14,194 புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுமானம் தொடங்கப்படும். அடிப்படை வசதிகளுடன் தரமான குடியிருப்புகள் வழங்க ரூ.1,253 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

> 5,904 சதுர கி.மீ. பரப்பளவில் விரிவுபடுத்தப்பட்ட சென்னை பெருநகர பகுதிக்கான ஓர் விரிவான முழுமைத் திட்டம் செயல்படுத்தப்படும். சென்னை பெருநகரப் பகுதியில் விரைவான விரிவாக்கத்திற்கான ஒருங்கிணைந்த திட்டமிடல் மேற்கொள்ளப்படும். இதற்கான நீண்ட கால வளர்ச்சி மற்றும் மாற்றத்திற்கான ஓர் வரைபடம் உருவாக்க ரூ.25 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

> வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறைக்கு 8,852 கோடி ரூபாய் ஒதுக்கீடு

> முதலமைச்சரின் ஒருங்கிணைந்த நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டம் கீழ், குடிநீர், சாலைகள், கழிவுநீர், போக்குவரத்து, பசுமை – மின் ஆளுமை ஒரே திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும். 2031–க்குள் உலகத் தர நகரங்களை உருவாக்கும் இலக்கை அடைய ரூ. 2,117 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

> கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறைக்கு 1,678 கோடி ரூபாய் ஒதுக்கீடு

> சென்னை மின் பகிர்மான திறன் ரூ.1,390 கோடியில் வலுப்படுத்தப்படும்.

பசுமை எரிசக்தி வழித்தடம் 2 ,3–ம் கட்டத் திட்டங்கள் விரைவுபடுத்தப்படும்.

விருதுநகர்–கோயம்புத்தூர் 765 கே.வி. மின் பகிர்மானத் திட்டம், கோயம்புத்தூர் – அரியலூர் 765 கே.வி. மின் பகிர்மானப் பாதைத் திட்டம் ரூ.6,884 கோடி மதிப்பில் செயல்படுத்தப்படும்.

> 11,760 மெகாவாட் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியைக் கையாளும் பசுமை எரிசக்தி வழித்தடம் கட்டம் 3 திட்டத்தை செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

> ரூ. 1,543 கோடி முதலீட்டில் 178 புதிய துணை மின்நிலையங்கள் உருவாக்கப்படும். ரூ.2,000 கோடியில் 40,000 பழைய மின்மாற்றிகள் மாற்றம் செய்யப்படும்.

> 5 ஆண்டுகளில் 20,000 பொது EV சார்ஜிங் நிலையங்கள் அமைக்கப்படும். இதற்கு ரூ.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. குடியிருப்புகளில் EV சார்ஜிங் நிலையங்களுக்கு அரசு மானியம் வழங்கப்படும். இதற்காக ரூ.5 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

> மாநகர இளைஞர் மற்றும் குடும்ப வீட்டு வசதித் திட்டம் கீழ் MY–HOME திட்டம் சென்னைப் பெருநகரத்தில் அறிமுகம் செய்யப்படும். PPP (Public–Private Partnership) முறையில் ரூ.15,000 கோடி முதலீடு செய்யப்படுகிறது.

இதன்மூலம் அடுத்த 7 ஆண்டுகளில் 1 லட்சம் வீடுகள் குறைந்த வருமானக் குடும்பங்கள் மற்றும் இளைஞர்களுக்கு பாதுகாப்பான, தரமான குடியிருப்புகள் ஏற்படுத்தித் தரப்படும்.

திருநர் நலன்: மாற்று பாலினத்தவருக்காக திறன் பயிற்சி , சுயதொழிலுக்கு மானியத்துடன் கடன் உதவி வழங்கப்படும். 5 மாவட்டங்களில் 'அரண்'தங்குமிடங்கள் அமைக்கப்படும். ரூ.50,000 வரை சுயதொழில் வங்கிக் கடனுக்கு மானியம் வழங்கப்படும். 15 மாவட்டங்களில் குறுகிய கால தங்குமிட வசதிகள் ஏற்படுத்தித் தரப்படும்.

மூத்த குடிமக்கள் பொழுதுபோக்கு மையங்கள்

நூலகம், யோகா, தியானம் , உள்ளரங்க விளையாட்டு வசதிகள் முதற்கட்டமாக 5 மாவட்டங்களில் நிறுவப்படும்

அங்கன்வாடி மேம்பாடு: 500 சிதிலமடைந்த அங்கன்வாடி மையங்களுக்கு புதிய கட்டிடங்கள் கட்டப்படும். குழந்தைகளின் பாதுகாப்பும் ஆரோக்கியமும் உறுதி செய்யும் முயற்சிகள் எடுக்கப்படும். பாதுகாப்பான குடிநீர், கழிப்பறை, மின்சார வசதிகள் உறுதி செய்யப்படும்.

> 69% இடஒதுக்கீட்டை பாதுகாக்க உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்படும். பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபின மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்படும்.

> 7.5% இடஒதுக்கீட்டின் கீழ் மருத்துவக் கல்விக் கட்டண உதவி வழங்கப்படும்.

> மாணவிகளின் கல்வி இடைநிற்றலைத் தடுக்க ஊக்கத்தொகை வழங்கப்படும். மொத்தமாக ரூ.462.41 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

> சிறுபான்மையின மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை தொடரும்.

> ஹஜ் பயண மானியம் ரூ.25,000–ல் இருந்து ரூ.35,000 ஆக உயர்வு.

> கிறிஸ்தவ, முஸ்லிம் மகளிர் உதவும் சங்கங்களுக்கு ரூ.1.05 கோடி ஒதுக்கீடு.

> கபர்ஸ்தான்கள் மற்றும் கல்லறைத் தோட்ட மேம்பாட்டிற்கு ரூ.34 கோடி ஒதுக்கீடு.

> 12 மாவட்டங்களில் 12 முதியோர் இல்லங்கள் நிறுவப்படும். இதற்காக ரூ.6.6 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

> மாற்றுத் திறனாளிகள் நலத் துறைக்கு 1,485 கோடி ரூபாய் ஒதுக்கீடு

அண்ணனின் சீர்: பெண்களின் திருமண நன்னாளில் 8 கிராம் தங்க நாணயம், ஒரு பட்டுப் புடவை வழங்கப்படும். இதற்காக ரூ.812 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

> பெருந்தலைவர் காமராசர் காலை உணவுத் திட்டம் 6–8ஆம் வகுப்பு மாணவர்களுக்கு திட்டம் விரிவாக்கம் செய்யப்படுகிறது. 15,414 பள்ளிகளில் பயிலும் 15.14 லட்சம் மாணவர்கள் பயன்பெறுவர். ரூ. 710 கோடி நிதி ஒதுக்கீடு

> சமூகநீதித் துறைக்கு 3,937 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

> ஆன்றோர் மேம்பாட்டுத் திட்டம்: பழங்குடியினர் குடியிருப்புகளில் வீடுகள், சாலைகள், குடிநீர், தெரு விளக்குகள், வாழ்வாதாரத் திட்டங்கள், சுகாதாரக் கட்டமைப்புகள், கல்வி நலன் சார்ந்த உதவித்தொகைத் திட்டங்கள், பள்ளி மற்றும் விடுதி மேம்பாடு உள்ளிட்ட அடிப்படை வசதி மேம்படுத்தப்பட ரூ.250 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

> அயோத்திதாசப் பண்டிதர் வாழ்விட மேம்பாட்டுத் திட்டம் கீழ் உட்கட்டமைப்பு மேம்பாடு. ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் அடிப்படை சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியுடன் வாழ்க்கைத் தரம் உயர்வை உறுதி செய்ய ரூ. 300 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

> ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயத் தொழிலாளர்களை நில உரிமையாளர்களாக மாற்றும் நோக்குடன், பெண்களுக்கு முன்னுரிமை வழங்க மண்ணின் மகள் திட்டம் செயல்படுத்தப்படும். இதன்மூலம் முத்திரைத்தாள் வரி மற்றும் பதிவுக் கட்டணத்தில் முழு விலக்கு அளிக்கப்படும். விவசாயம் செய்திட நவீன தொழில்நுட்பப் பயிற்சி வழங்கப்படும். இதற்காக ரூ. 5.20 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

> அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம் செயல்படுத்த ரூ.165 கோடி ஒதுக்கீடு செய்யப்படும். இது ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் தொழில் முன்னவுத் திறனை ஊக்குவிக்கும் திட்டம்.

இதன்மூலம் மூலதண மானியம் மற்றும் கடன் வழங்கி தொழில் தொடங்க ஆதரவு அளிக்கப்படும். பொருளாதார முன்னேற்றம் மற்றும் தன்னிறைவு நோக்கில் செயல்படுத்தப்படுகிறது.

> ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் வாழ்வாதரத்தை மேம்படுத்தவும், நிலையான வளர்ச்சியை உறுதிசெய்யவும் 'வெற்றி தொழில் முனைவோர் திட்டம்' செயல்படுத்த தமிழ்நாடு 2026– 27 பட்ஜெட்டில் ரூ.75 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

> தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறைக்கு 2,022 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

> சிறப்புத் திட்ட செயலாக்கத் துறைக்கு ரூ.17,150 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

> மாநிலம் முழுவதும் 10 ஒலிம்பிக் சிறப்பு மையங்கள் அமைக்கப்பட ரூ.50 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

> தமிழரின் பாரம்பரிய விளையாட்டுகளை உலக அரங்கிற்கு கொண்டு செல்ல தமிழ்நாடு கிராமிய விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படும். இதற்காக ரூ.42 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

> விளையாட்டில் ஆர்வமும் திறமையும் கொண்ட 8 முதல் 18 வயதுக்கு உட்பட்ட இளம் பள்ளி மாணவர்களை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு உலகத்தரம் வாய்ந்த பயிற்சிகள் வழங்க ரூ.5 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

> இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறைக்கு ரூ.1051 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

> அண்ணல் அம்பேத்கர் அயல்நாட்டுக் கல்வி உதவித் தொகைத் திட்டம், நடப்பாண்டில் 352 மாணவர்கள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்படும். முன்னெப்போதும் இல்லாத வகையில் ரூ.131 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

> 'வெற்றித் தமிழகம்' என்ற பெயரில் தொலை நோக்கு திட்டங்களை செயல்படுத்தவுள்ளோம்.

> பள்ளிக் கல்வித் துறைக்கு ரூ.44,527 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

> 10,000 அரசுப் பள்ளிகளில் 'சூப்பர் க்ளீன், சூப்பர் கேம்பஸ்' திட்டம் செயல்படுத்தப்படும். இதற்காக ரூ.139 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

> பெருந்தலைவர் காமராஜர் சிறப்புப் பள்ளிகள் அமைக்க ரூ.125 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

> 5000 அரசுகப் பள்ளிகளிலிருந்து கூடுதலாக 2,600 பள்ளிகளுக்கு TN SPARKவிரிவுபடுத்தப்படும்.

> பாடத்திட்டை மறுசீரமைப்பு செய்ய ரூ.25 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

> 'போதையில்லா தமிழ்நாடு' திட்டத்துக்கு ரூ.7 கோடி ஒதுக்கீடு. பள்ளிகளில் போதைப் பொருள் தீமைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

> 11–ம் வகுப்பு படிக்கும் மாணவர்களுக்கு ஹெல்மெட், குடிநீர் பாட்டில் வைக்கும் வசதிகள் கொண்ட சைக்கிள் வழங்கப்படும். இதற்காக ரூ.277 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

> பள்ளி பாடத்திட்டம் மறுசீரமைப்புக்கு ரூ.25 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

> பொது நூலகங்களை டிஜிட்டல் நூலகங்களாக மாற்ற ரூ.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

> உயர் கல்வித் துறைக்கு ரூ.8393 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

> கல்லூரி மாணவர்களுக்கு ரூ.2000 கோடியில் 'வெற்றி மடிக்கணினி திட்டம்' செயல்படுத்தப்படும்.

> போட்டித் தேர்வுகளுக்கு பயிற்சியளிக்க கூடுதலாக ரூ.3 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

> ரூ.90 கோடி மதிப்பீட்டில் 5 புதிய தொழில்பயிற்சி நிறுவனங்கள் அமைக்கப்படும்.

> 2031–ம் ஆண்டுக்குள் பொறியியல கல்லூரிகள், பாலிடெக்னிக் கல்லூரிகள் மற்றும் தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் 5 லட்சம் இளைஞர்களுக்கு செயற்கை நுண்ணறிவு திறன் பயிற்சி அளிக்கப்படும்.

>புனித ஹஜ் பயணத்துக்கான அரசு மானியம் ரூ.25,000–ல் இருந்து ரூ.35,000 ஆக உயர்த்தப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

>சிறுபான்மையின மாணவர்களுக்குக் கால்வி உதவித் தொகையினை இந்த அரசு தொடர்ந்து வழங்கும். தமிழ்நாடு மாநில ஹஜ் கமிட்டி மூலம் முதல்முறையாக புனித ஹஜ் பயணம் மேற்கொள்ளும் பயணிகளுக்கு வழங்கப்படும் 25,000 ரூபாய் மானியம் நமது அரசால் 35,000 ரூபாயாக உயர்த்தப்படும்.

>கிறிஸ்தவ மற்றும் முஸ்லிம் மகளிர் உதவும் சங்கங்கள் 1.05 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் கூடுதலாகத் துவக்கப்படும். மேலும், கபர்ஸ்தான்கள், கல்லறைத் தோட்டங்களின் உட்கட்டமைப்பினை மேம்படுத்துவதற்காக திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 34 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

>சிறுபான்மையினரைப் பாதுகாப்பதிலும், அவர்களின் நலன்களிலும் நமது முதல்வர் விஜய் தலைமையிலான அரசு ஒருபோதும் சமரசம் செய்து கொள்ளாது. திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறைக்கு 1,700 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது"

>தமிழக அரசின் நிதிநிலை அறிக்கையில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறைக்கு ரூ.2,022 கோடி, சிறப்பு திட்ட செயலாக்க துறைக்கு ரூ. 17,150 கோடி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறைக்கு ரூ.1,051 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

>தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறைக்கு ரூ.2,022 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சிறப்பு திட்ட செயலாக்க துறைக்கு 17,150 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

> மின்சார வாகனங்கள் பழுது பார்க்கும் பயிற்சி வழங்குவதற்காக ரூ.3 கோடி நிதி ஒதுக்கப்படும். இத்திட்டம் மூலம் 22,500 நபர்கள் பயன்பெறுவார்கள்.

> அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் ஏஐ கற்றல் தொழில் பிரிவு ரூ.10 கோடி மதிப்பீட்டில் அறிமுகப்படுத்தப்படும்.

> 5 புதிய தொழிற்பயிற்சி நிலையங்கள் 90 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.

> போட்டி தேர்வுகளுக்காக கூடுதல் பயிற்சி வகுப்புகளை நடத்த 3.38 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும்.

வெற்றி திறன் பயிற்சித் திட்டம்

> 12 லட்சம் கல்லூரி மாணவர்களுக்கும், ஒரு லட்சம் வேலையில்லா இளைஞர்களுக்கும் வெற்றி திறன் பயிற்சித் திட்டம் ரூபாய் 150 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.

> செயற்கை நுண்ணறிவு, ரோபோடிக்ஸ் மற்றும் இணைய கருவிகள் குறித்த அறிவுக்கான தமிழ்நாடு பள்ளி திட்டம் கூடுதலாக 2, 600 பள்ளிகளுக்கு விரிவுபடுத்தப்படும்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறைக்கு 1,051 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறையில் வெளியான அறிவிப்புகள் விவரம்:

> தமிழகத்தில் 10 ஒலிம்பிக் சிறப்பு மையங்கள் ரூ. 50 கோடியில் உருவாக்கப்படும்.

> விளையாட்டில் ஆர்வம் கொண்ட 8 முதல் 18 வயதிற்குட்பட்ட இளம் பள்ளி மாணவர்களுக்கு உலகத்தரம் வாய்ந்த பயிற்சிகள் வழங்க ரூ.5 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

> தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் சிறந்து விளங்கும் 500 வீரர்களுக்கு நிதி உதவி வழங்க ரூ.22 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

> தமிழரின் பாரம்பரிய விளையாட்டுகளை உலக அரங்கிற்கு கொண்டு செல்லும் வகையில் தமிழ்நாடு கிராமிய விளையாட்டுப் போட்டிகள் நடத்த ரூ.42 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

> அனைத்து ஊராட்சி ஒன்றியங்கள் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் அருகாமை பகுதிகளில் விளையாட்டு வசதிகள் கொண்ட உடற்பயிற்சி கூடங்கள் மற்றும் விளையாட்டு வளாகங்கள் உருவாக்கப்படும். என தெரிவித்தார்.

தலையங்கம்
மதுரை மணி
புதன்கிழமை 05.08.2026
விசுவாவசு தமிழ் வருடம்
ஆடி மாதம் 20-ம் தேதி

## AI அதிரடி... இந்திய ஐடி நிறுவனங்களுக்கு வருவாய் சரிவு!




செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் ஆட்டோமேஷன் தொழில்நுட்பங்களின் வேகமான வளர்ச்சி, இந்திய ஐடி நிறுவனங்களின் வருவாயில் தாக்கத்தை ஏற்படுத்தத் தொடங்கியுள்ளது. முன்னணி ஐடி நிறுவனமான HCLTech, கூகுளுடன் நீண்டகாலமாக இருந்து வந்த ஒப்பந்தத்தில் சுமார் 50 மில்லியன் அமெரிக்க டாலர் (சுமார் ₹477 கோடி) மதிப்பிலான பணிகளை இழந்துள்ளது.

மென்பொருள் உருவாக்கம் மற்றும் இன்ஜினியரிங் பணிகளில் கூகுள் அதிகளவில் AI கருவிகளை பயன்படுத்தத் தொடங்கியதால், மனித உழைப்பை சார்ந்த சேவைத் தேவைகள் குறைந்ததே இதற்குக் காரணமாக கூறப்படுகிறது. இருப்பினும், இந்த இழப்பு HCLTech நிறுவனத்தின் மொத்த ஆண்டு வருவாயில் சுமார் 0.3% மட்டுமே என்பதால் உடனடி பெரிய பாதிப்பு ஏற்படாது என கூறப்படுகிறது.

ஊழியர்கள் பணிநீக்கம் செய்யப்படமாட்டார்கள்; அதற்கு பதிலாக அவர்கள் பிற திட்டங்களுக்கு மாற்றப்படுவார்கள் என தகவல் வெளியாகியுள்ளது. அதேவேளையில், AI பயன்பாடு அதிகரிப்பதால் இந்திய ஐடி துறையில் பாரம்பரிய சேவை முறை மாறும் என்றும், எதிர்காலத்தில் AI திறன்களைக் கொண்ட ஊழியர்களுக்கே அதிக தேவை இருக்கும் என்றும் நிபுணர்கள் எச்சரிக்கின்றனர். இதேபோன்ற அழுத்தம் மற்ற முன்னணி ஐடி நிறுவனங்களிலும் உருவாகி வருவது குறிப்பிடத்தக்கது.

## ஆடி கிருத்திகை விழா; திருவள்ளூர் மாவட்டத்திற்கு உள்ளூர் விடுமுறை!




திருவள்ளூர், ஆக. 05–

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணியில் முருகப்பெருமானின் ஐந்தாம் படை வீடான முருகன் கோவில் உள்ளது. இந்த கோவிலில் ஆடி கிருத்திகை திருவிழா நாளை வெகுவிமரிசையாக கொண்டாடப்பட உள்ளது. இதனை முன்னிட்டு திருவள்ளூர் மாவட்டத்திற்கு நாளை உள்ளூர் விடுமுறை அளிக்கப்படுகிறது என கலெக்டர் கவிதா அறிவித்து உள்ளார். இந்த உள்ளூர் விடுமுறை நாள் செலவாணி முறிச்சட்டம் 1881–ன் கீழ் வராது என்பதால் இந்த மாவட்டத்தில் உள்ள கருவூலங்களும், சார் நிலை கருவூலங்களும், பாதுகாப்பான அவசர அலுவல்களை கவனிக்கும் பொருட்டு குறிப்பிட்ட பணியாளர்களோடு நாளை (6–ந்தேதியன்று) அரசு செயல்பட வேண்டும். இந்த விடுமுறை நாளை ஈடு செய்யும் பொருட்டு 8–ந்தேதி சனிக்கிழமை அன்று பணி நாளாக அறிவிக்கப்படுகிறது.

எனவே இந்த உள்ளூர் விடுமுறையானது திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் பொருந்தும் என மாவட்ட நிர்வாகம் தெரிவித்து கொண்டுள்ளது.


## தூத்துக்குடியில் இருந்து ஹரியானாவுக்கு சரக்கு ரயிலில் மின்சார கார்கள் அனுப்பி வைப்பு!



தூத்துக்குடி, ஆக. 05–

தூத்துக்குடி வ.உ.சி. துறைமுகம் அருகே தயாரிக்கப்பட்ட 100 மின்சார கார்கள், 25 சிறப்பு சரக்கு பெட்டிகள் கொண்ட ரயில் மூலம் ஹரியானா மாநிலம் பல்லப்காருக்கு அனுப்பப்பட்டன. இதன் மூலம் மதுரை ரயில்வே கோட்டத்திற்கு ரூ.22.07 லட்சம் சரக்கு வருமானம் கிடைத்துள்ளது. இனி மாதந்தோறும் சுமார் 10 சரக்கு ரயில்களில் மின்சார கார்கள் அனுப்ப திட்டமிடப்பட்டுள்ளது.

## பிரதமர் குறித்த ஏ.ஐ., அவதூறு வீடியோ; மெட்டா நிறுவனத்திற்கு மத்திய அரசு கடும் எச்சரிக்கை!




புதுடில்லி, ஆக. 05–

பிரதமர் மோடிக்கு எதிரான ஏஐ அவதூறு வீடியோ மற்றும் பெண்கள், குழந்தைகளுக்கு எதிரான ஆபாச வீடியோக்கள் தொடர்பாக பேஸ்புக் மற்றும் இன்ஸ்டாகிராமின் தலைமை நிறுவனமான மெட்டாவுக்கு மத்திய அரசு கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

வினாத்தாள் கசிவுக்கு எதிராக டில்லியில் போராட்டம் நடத்திய இளைஞர்களுக்கு உறுதியளிக்கும் விதமாக, பிரதமர் மோடி பேசிய செல்பி வீடியோ, அவரது பேஸ்புக் பக்கத்தில் பதிவிட்டிருந்தார். இந்த வீடியோ சிறிது நேரம் முடக்கப்பட்டதால் மத்திய அரசு கடும் கண்டனம் தெரிவித்தது. இது தொழில்நுட்பக் கோளாறு காரணமாக ஏற்பட்ட பிரச்னை எனக் கூறி, மெட்டா நிறுவனம் மன்னிப்பு கோரியது. ஆனால், இந்த விளக்கம் போதுமானதாக இல்லை எனக் கூறி, அதனை மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் நிராகரித்தது. மேலும், டில்லியில் இன்றும், நாளையும் நடைபெறும் உயர்மட்டக் கூட்டத்தில் ஆஜராகுமாறு மெட்டா நிறுவன அதிகாரிகளுக்கு மத்திய அரசு சம்மன் அனுப்பியிருந்தது.

இந்த நிலையில், இந்திய அரசியலமைப்பு சட்டத்திற்குட்பட்டு நடக்கவில்லை எனில், பாதுகாப்பு சலுகைகள் வழங்க முடியாது என்று மெட்டா நிறுவனத்திற்கு தகவல் தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பத்திற்கான பார்லி குழு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக பாஜ எம்பியும், பார்லி குழுவின் தலைவருமான நிஷிகாந்த் துபே, தனது எக்ஸ் தளப்பக்கத்தில் தெரிவித்ததாவது: பிரதமர் மோடி, குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு எதிரான அவதூறு ஏஐ வீடியோக்கள் தொடர்பாக மெட்டா நிறுவனத்தின் மீது தெலுங்கானா போலீஸார் வழக்குப்பதிவு செய்துள்ளனர். அதேபோல, நிதி மோசடி செயலிகள் தொடர்பாக கூகுள் மீது ஹைதராபாத் போலீஸ் பதிவு செய்துள்ள வழக்குகளுக்கு, இந்தியத் தகவல் தொழில்நுட்பச் சட்டத்தின் கீழ் வலைதளங்களுக்கான பாதுகாப்பு வழங்கப்படாது. இந்தச் சமூக வலைதளத் தளங்கள் இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்குக் கட்டுப்பட்டே ஆக வேண்டும், இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

## தீவிரவாதி போல் என்னை அழைத்து சென்று விசாரணை - உதயநிதி!



திருச்சி, ஆக. 05–

தஞ்சை ஆர்ப்பாட்டத்தில் யாரையும் நான் தவறாக பேசவில்லை; காவிரி பிரச்சினையை அவையில் எழுப்பக்கூடாது என்பதற்காக இந்த அரசு டைவர்ட் செய்துள்ளது என உதயநிதி ஸ்டாலின் கூறினார்.

திருச்சி விமான நிலையத்தில் எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் செய்தியாளர் சந்திப்பில் பேசியதாவது:– திமுக தலைவரின் உத்தரவை ஏற்று தஞ்சையில் விவசாயிகளுக்கு ஆதரவாக போராட்டம் நடத்தினோம்.

விவசாயிகளுக்கு தவெக அரசு செய்த துரோகங்கள், பொய் வாக்குறுதிகள் குறித்து ஆர்ப்பாட்டத்தில் பேசினேன்.

நான் யாரையும் தவறாக பேசவில்லை, பேசாத ஒன்றை கட் காபி செய்து பரப்பி உள்ளனர். திசை திருப்பும் முயற்சியாக, நான் பேசாத ஒன்றை பேசியதாக திரித்து வீடியோவை பரப்பி உள்ளனர். காவிரி பிரச்சினையை அவையில் எழுப்பக்கூடாது என்பதற்காக இந்த அரசு டைவர்ட் செய்துள்ளது.

தீவிரவாதியை போல், என்னை 400 கி.மீ.க்கு அழைத்து சென்று செங்கிப்பட்டியில் வைத்து விசாரணை நடத்தினர்.

விவசாயிகளுக்கு ஆதரவாக பேசியதற்கு தரம்கெட்ட அரசு கைது செய்துள்ளது. இதற்கு நான் அஞ்சவில்லை.

எனக்கு மனைவி, மகள் உள்ளனர். தமிழ்நாட்டில் இருக்கும் ஒவ்வொரு பெண்களையும் எனது தாயாக, சகோதரிகளாக நான் பார்க்கிறேன். எந்த தவறான எண்ணத்திலும் பெண்களை தரம் தாழ்த்தி பேச வேண்டும் என்று நான் எண்ணவில்லை. ஆர்ப்பாட்டத்தில் இரட்டை அர்த்தத்தில் நான் பேசவில்லை, சிங்கிள் மீனிங்கில் தான் பேசினேன். பேசுவேன். ஒருசில தலைவர்கள் நான் பேசியதை ஆராயாமல் கண்டனம் தெரிவித்தது எனக்கு வருத்தம் தருகிறது.

அரசின் பொய் வழக்கு போட்டு பயமுறுத்து பார்க்கின்றனர். இதற்கெல்லாம் பயப்படும் ஆள் நான் இல்லை. இதே திருச்சி விமான நிலையத்தில் புறமுதுகு காட்டினார் முதல்–அமைச்சர் விஜய். வழக்கு போட்டால் தன்னை போல பயப்படுவேன் என நினைத்துவிட்டார். பொய் வழக்கை சட்ட முறைப்படி எதிர்கொள்வேன். இவ்வாறு அவர் கூறினார்.

## கனமழையை தொடர்ந்து மும்பையில் மலேரியா, டெங்கு காய்ச்சல் பரவல் அதிகரிப்பு!



மும்பை, ஆக. 05–

மராட்டிய மாநிலத்தின் தலைநகர் மும்பையில் தொடர் கனமழை பெய்து வருகிறது. இதன் விளைவாக அங்கு கடந்த ஜூலை மாதத்தில் மலேரியா மற்றும் டெங்கு காய்ச்சல் பாதிப்பு இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது. அத்துடன் எலி காய்ச்சல் மற்றும் வயிற்றுப்போக்கு பாதிப்புகளும் கடுமையாக அதிகரித்துள்ளதால் பொதுமக்கள் பெரும் பீதி அடைந்துள்ளனர்.

மும்பையில் கடந்த ஜூன் மாதம் 655–ஆக இருந்த மலேரியா பாதிப்பு, ஜூலை மாதத்தில் 1,380 ஆக உயர்ந்து இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது. அதேபோல், ஜூன் மாதத்தில் 266–ஆக இருந்த டெங்கு பாதிப்பு கடந்த ஜூலை மாதத்தில் 466–ஆக அதிரடியாக உயர்ந்துள்ளது. தேங்கும் மழை நீரே இந்த கொசு உற்பத்திக்கு முக்கிய காரணம் என டாக்டர்கள் எச்சரித்துள்ளனர்.

இந்தநிலையில் டெங்கு மற்றும் மலேரியா காய்ச்சல் பாதிப்பு இரண்டு மடங் காக அதிகரித்துள்ள நிலையில், நகரின் பல்வேறு பகுதிகளில் கொசுத் தொல்லை தாங்கமுடியாத அளவிற்கு உயர்ந்துள்ளதாக பொதுமக்கள் குற்றம் சாட்டியுள்ளனர். எனவே, மாநகராட்சி நிர்வாகம் உடனடியாக போர்க்கால அடிப்படையில் கொசுக்களை ஒழிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

நகரின் முக்கிய குடியிருப்பு பகுதிகள், குடிசைப்பகுதிகள் மற்றும் கட்டுமானப் பணிகள் நடைபெறும் இடங்களை சுற்றி கொசுக்கள் அதிகளவில் உற்பத்தி யாகி வருகின்றன. குறிப்பாக மாலை நேரங்களில் கொசுக்களின் தொல்லை மிக்க கடுமையாக இருப்பதால், பொதுமக்கள் கடும் அவதிக்குள்ளாகி வருகின்றனர்.

## டெல்லியில் துப்பாக்கி கடத்தல் கும்பல் அதிரடி கைது!




புதுடெல்லி, ஆக. 05–

டெல்லி மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் கள்ளத்துப்பாக்கிகள் சப்ளை செய்யப்படுவதாக போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதையடுத்து, டெல்லி போலீசின் சிறப்பு பிரிவு போலீசார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டனர். அப்போது, மத்திய பிரதேசம் மற்றும் உத்தரபிரதேச மாநிலங்களில் இருந்து துப்பாக்கிகளை கடத்தி வந்து விற்ற 8 பேர் கொண்ட கும்பலை போலீசார் அதிரடியாக கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து 12 செ.மி. தானியங்கி துப்பாக்கிகள், 5 நாட்டுத்துப்பாக்கிகள் உள்பட மொத்தம் 18 கள்ளத் துப்பாக்கிகள் பறிமுதல் செய்யப்பட்டன. மேலும் அரிவாள், தோட்டாக்களையும் போலீசார் பறிமுதல் செய்தனர். இவர்கள் போலீசில் சிக்காமல் இருக்க, போலி அடையாளங்கள் மற்றும் ரகசிய செயலிகளை பயன்படுத்தி இந்த கடத்தல் நெட் வொர்க்கை நடத்தி வந்தது விசாரணையில் தெரியவந்துள்ளது. பிடிபட்டவர்கள் மீது ஏற்கனவே பல வழக்குகள் நிலுவையில் உள்ளதும் தெரியவந்தது.

## இல்லாத ஊழியர்களுக்கு சம்பளம்; மராட்டிய மாநில காவல்துறையில் ரூ.6.5 கோடி மோசடி!

மும்பை, ஆக. 05–

மராட்டிய மாநில காவல்துறையில் கடந்த 2019–20 காலகட்டத்தில் பயன்படுத்தப்பட்ட, ‘சேவார்த்’ சம்பள மென்பொருளில் பதிவான தகவல்களை, புதிய தளத்துக்கு மாற்றும் பணிகள் சமீபத்தில் நடைபெற்றன. அப்போது, காவல்துறையில் இல்லாத ஊழியர்களின் பெயர்களுக்கு சம்பளமாக 6.5 கோடி ரூபாய் பணப்பரிமாற்றம் செய்யப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது

இந்த குறித்து, வடக்கு மண்டல போலீஸ் அதிகாரி அளித்த புகாரின் அடிப்படையில் விசாரணை தொடங்கப்பட்டது. அதில், காவல்துறையுடன் தொடர்பில்லாத 10 பேரின் பெயர்கள், ஊழியர்களின் பட்டியலில் சேர்க்கப்பட்டு, 2019 டிசம்பர் முதல், 2020 பிப்ரவரி வரையிலும், பின்னர் 2020 ஜூன் முதல் 2020 செப்டம்பர் வரையிலும் மாதந்தோறும் சம்பளம் வழங்கப்பட்டுள்ளது என்பது தெரியவந்தது. அதோடு, போலியாக வருகைப் பதிவேடுகள் தயாரிக்கப்பட்டு மோசடிகள் நடந்திருப்பதும் அம்பலமானது.

இதன் மூலம், ரூ.6.5 கோடி வரை மோசடி செய்யப்பட்டுள்ளதாக விசாரணையில் தெரியவந்தது. இதையடுத்து, மும்பை போலீஸ் துறையில் அப்போதைய நிர்வாக அதிகாரிகளாக பணியாற்றிய ராம்கிஷன் கோஸ்வாமி, நாகேஷ் தல்வாடேகர், விஜயா சவான், தலைமை எழுத்தர் அஜெய் ரத்தோட் மற்றும் மூத்த எழுத்தர் அமோல் மேஷ்ராம் ஆகியோர் மீது மோசடி, போலி ஆவணங்கள் தயாரித்தல், குற்றச்சதி, நம்பிக்கை மோசடி உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதில் விஜய் சவான், அமோல் மேஷ்ராம் இருவரும் சேர்ந்து போலீசாருக்கான போலி சேவை எண், ஓய்வூதிய திட்ட எண்களை உருவாக்கி, 10 போலி ஊழியர்களின் பெயர்களை சேர்த்து, இந்த மோசடிக்கு உதவியுள்ளனர். இதனால், அவர்கள் இருவரும் பணியில் இருந்து சஸ்பெண்ட செய்யப்பட்டுள்ளனர். போலி ஊழியர்களின் பெயர்களில் திறக்கப்பட்ட வங்கி கணக்குகளை இயக்கியது யார்? அதன் மூலம் யார், யாருக்கெல்லாம் பணம் சென்றது என்ற விவரங்கள் குறித்தும் போலீசார் தீவிரமாக விசாரணை நடத்தி வருகின்றனர்.

## ஆஞ்சநேயர் அருளால் சாவான் மாதத்தில் அதிர்ஷ்டம் பெறும் 4 ராசிகள்!






சிவபெருமானின் பதினொன்றாவது அவதாரமாக போற்றப்படும் ஆஞ்சநேயர், பக்தர்களுக்கு தைரியம், வெற்றி மற்றும் தடைகளை வெல்லும் சக்தியை அருள்பவர் என புராணங்கள் கூறுகின்றன. சாவான் மாதத்தில் ஆஞ்சநேயரை பக்தியுடன் வழிபடுவது சிறப்பு பலன்களை அளிக்கும் என ஜோதிட நம்பிக்கைகள் தெரிவிக்கின்றன. குறிப்பாக மேஷம், சிம்மம், விருச்சிகம் மற்றும் மகரம் ஆகிய நான்கு ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் மிகவும் சாதகமானதாக இருக்கும் என்று கூறப்படுகிறது.

மேஷ ராசியினருக்கு புதிய முயற்சிகள் வெற்றி பெறும். பயணங்கள் லாபகரமாக அமையும். கோபத்தை கட்டுப்படுத்தி நிதானமாக செயல்பட்டால் தொழில் மற்றும் பணியில் முன்னேற்றம் கிடைக்கும்.

சிம்ம ராசியினருக்கு தலைமைத்துவ திறன் வெளிப்படும். கடினமான பணிகளையும் வெற்றிகரமாக முடிக்கும் ஆற்றல் அதிகரிக்கும். நண்பர்கள் மற்றும் குடும்பத்தினரின் ஒத்துழைப்பால் நினைத்த காரியங்கள் நிறைவேறும்.

விருச்சிக ராசியினருக்கு இதுவரை இருந்த சவால்கள் படிப்படியாக குறையும். புதிய வாய்ப்புகள் தேடி வரும். தன்னம்பிக்கையுடன் செயல்பட்டால் எதிர்பார்த்த வெற்றியை அடைய முடியும்.

மகர ராசியினருக்கு வருமான உயர்வு, தொழில் வளர்ச்சி மற்றும் நிதி நெருக்கடியில் இருந்து மீள்வதற்கான வாய்ப்புகள் உருவாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். திருமண வாழ்க்கையிலும் நல்ல புரிதல் ஏற்படும்.

இந்த காலத்தில் செவ்வாய்க்கிழமைகளில் ஆஞ்சநேயர் கோவிலுக்கு சென்று வழிபடுவதும், ஹனுமான் சாலிசா அல்லது ஆஞ்சநேயர் நாமங்களை ஜபிப்பதும் மன உறுதியையும், வெற்றியையும், தடைகள் நீங்கும் அருளையும் வழங்கும் என்று ஜோதிடர்கள் தெரிவிக்கின்றனர்.

## வாட்ஸ்அப்பில் புதிய மாற்றம்!


புதுடெல்லி, ஆக. 05–

இந்தியாவின் புதிய தரவுப் பாதுகாப்புச் சட்டங்களுக்கு இணங்குவதற்காக, வாட்ஸ்அப் நிறுவனம் தற்போது சில பயனர்களிடம் வயது தொடர்பான ஒப்புதலை கேட்கும் புதிய



அம்சத்தைச் சோதனை செய்து வருகிறது. இந்தியாவில் விரைவில் அமலுக்கு வரவிருக்கும் மத்திய டிஜிட்டல் தனிநபர் தரவு பாதுகாப்பு சட்டத்தின்படி, 18 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் தரவுகளைப் பயன்படுத்துவதற்கு முன்பு அவர்களது பெற்றோரின் சரிபார்க்கப்பட்ட ஒப்புதலைப் பெறுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இந்தநிலையில் பிரதமர் மோடி வீடியோ நீக்கம், வாட்ஸ் அப் கணக்குகள் திடீர் முடக்கத்தை தொடர்ந்து மெட்டா நிறுவனத்தின் சர்வ தேச பொதுக் கொள்கைத் தலைவர் ஜோயல் கப்ளான் மற்றும் அவரது தொழில்நுட்பக் குழுவுக்கு மத்திய அரசு அதிகாரப்பூர்வமாக நேரில் ஆஜராகச் சம்மன் அனுப்பியுள்ளது.

## விரல் ரேகை பதிய ரேஷன் கடையில் 8, 9-ல் சிறப்பு முகாம்!



சென்னை, ஆக. 05–

தமிழக ரேஷன் கடைகளில் முன்னுரிமை, அந்தியோதயா ரேஷன் கார்டுதாரர்களின், ‘ஆதார்’ சரிபார்ப்பு வாயிலாக, உண்மை தன்மையை உறுதி செய்வதற்கான விரல் ரேகை பதிவு செய்யும் பணி நடக்கிறது.

இன்னும் எட்டு லட்சம் உறுப்பினர்கள் விரல் ரேகை பதிவு செய்யவில்லை. அவர்களுக்காக, வரும், 8, 9ம் தேதிகளில் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட உள்ளன. இதை பயன்படுத்தி, இதுவரை விரல் ரேகை பதிவு செய்யாத ரேஷன் கார்டுகளில் உள்ள உறுப்பினர்கள் அனைவரும் பதிவு செய்து கொள்ளுமாறு, உணவு வழங்கல் துறை தெரிவித்துள்ளது.

## ENROLLMENT NOTICE

After 10 days of the , Publication of this notice with iu THREE Months there after **S. SWARNALATHA**, D/o. R. SELLAYA PILLAI and w/o. A. DHAYALASUNDAR, Aged 49 years, Permanently residing at 9–3–6, Grama Munst Street. Ayyampalayam (P.0), Authoor (T.K), Dindigul – Dt Pin–624204. intend having My enrollment as an advocate Moved before the Bar Council of Tamil Nadu, Bar council Buildings, High Court Campus Chennai– 104. Those who have any Valid Objections May notify the Same to the Bar Council with in ten days.

***S. SWARNALATHA***







சிறிய விஷயங்களுக்குக் கூட குழந்தைகள் அடிக்கடி கோபப்படுவது, அழுவது அல்லது அடம்பிடிப்பது வெறும் பிடிவாதம் என்று கருதக்கூடாது என குழந்தைகள் நல மருத்துவர்கள் மற்றும் உளவியல் நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

நிபுணர்கள் கூறுவதன்படி, குழந்தைகளுடன் பெற்றோர் போதுமான நேரம் செலவிடாதது, அவர்களின் உணர்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காதது, அடிக்கடி திட்டுவது மற்றும் மற்ற குழந்தைகளுடன் ஒப்பிடுவது போன்றவை அவர்களிடம் விரக்தி மற்றும் கோபத்தை உருவாக்கலாம்.

மேலும், போதிய தூக்கமின்மை, நீண்ட நேரம் மொபைல் மற்றும் டேப்லெட் பயன்படுத்துவது, சீரற்ற உணவுப் பழக்கம் மற்றும் உடல் சோர்வு ஆகியவையும் குழந்தைகளின் எரிச்சலை அதிகரிக்கும் காரணங்களாக இருக்கலாம்.

குழந்தை கோபப்படும் நேரத்தில் பெற்றோர்களும் கோபமாக பதிலளிப்பதை தவிர்த்து, அவர்கள் ஏன் கோபப்படுகிறார்கள் என்பதை அமைதியாகக் கேட்டு புரிந்துகொள்ள வேண்டும் என்று மருத்துவர்கள் அறிவுறுத்துகின்றனர். தினமும் குழந்தைகளுடன் சிறிது நேரம் செலவிடுவது, அவர்களைப் பாராட்டுவது, விளையாடுவது மற்றும் அவர்களின் கருத்துகளுக்கு மதிப்பளிப்பது உணர்ச்சி வளர்ச்சிக்கு உதவும்.

குழந்தையின் கோபம் நீண்ட நாட்களாக தொடர்வதுடன், பள்ளி வாழ்க்கை அல்லது அன்றாட செயல்பாடுகளையும் பாதித்தால், குழந்தைகள் நல மருத்துவர் அல்லது குழந்தை உளவியல் நிபுணரை அணுகி ஆலோசனை பெறுவது அவசியம் என நிபுணர்கள் பரிந்துரைக்கின்றனர்.

# ஆடி திருக்கல்யாண விழா: மதுரை-ராமேஸ்வரம் சிறப்பு ரயில் அறிவிப்பு!



மதுரை, ஆக. 05–

ராமேஸ்வரம் அருள்மிகு ராமநாதசுவாமி கோயில் ஆடி திருக்கல்யாண விழாவை முன்னிட்டு ஆகஸ்ட் 1112 ஆகிய தேதிகளில் மதுரைராமேஸ்வரம் இடையே ஒரு ஜோடி முன்பதிவில்லா சிறப்பு எக்ஸ்பிரஸ் ரயில்கள்இயக்கப்படுகின்றன.

06103 மதுரை–ராமேஸ்வரம் சிறப்பு ரயில்: ஆகஸ்ட் 11 இரவு 11.00 மணிக்கு மதுரையில் புறப்பட்டு, ஆகஸ்ட் 12 அதிகாலை 2.30 மணிக்கு ராமேஸ்வரம் சென்றடையும்.

06104 ராமேஸ்வரம்மதுரை சிறப்பு ரயில்: ஆகஸ்ட் 12 அதிகாலை 3.00 மணிக்கு ராமேஸ்வரத்தில் புறப்பட்டு, 6.00 மணிக்கு மதுரை வந்தடையும்.

இந்த ரயில்கள் மதுரை கிழக்கு, திருப்புவனம், மானாமதுரை, பரமக்குடி, ராமநாதபுரம் உள்ளிட்ட நிலையங்களில் நின்று செல்லும். ரயிலில் 12 இரண்டாம் வகுப்பு பொதுப் பெட்டிகள் மற்றும் 2 லக்கேஜ்பிரேக் வேன் பெட்டிகள்இணைக்கப்பட்டுள்ளன.

# ஒப்பிலா மீனவ மக்கள் ஆட்சியரிடம் மனு!



ராமநாதபுரம், ஆக. 05–

ராமநாதபுரம் மாவட்டம், கடலாடி அருகே உள்ள ஒப்பிலா கிராமத்தில் 60 ஆண்டுகளுக்கும் மேலாக வசித்து வரும் மீனவ குடும்பங்களை வெளியேற்ற வனத்துறையினர் தொடர்ந்து இடையூறு செய்வதாக குற்றம்சாட்டி, மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்தனர்.

தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வரும் தங்களை வெளியேற்றினால் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் என்றும், குழந்தைகள், முதியவர்கள் உள்ளிட்டோர் பாதிக்கப்படுவார்கள் என்றும் மனுவில் தெரிவித்துள்ளனர்.

மேலும், வனத்துறையினர் நடவடிக்கையை நிறுத்தாவிட்டால் வாக்காளர் அட்டை, குடும்ப அட்டை உள்ளிட்ட அனைத்து ஆவணங்களையும் ஒப்படைத்து தர்ணா போராட்டத்தில் ஈடுபடுவோம் என்றும் எச்சரித்துள்ளனர். இதுகுறித்து உரிய விசாரணை நடத்தி, தங்களது குடியிருப்பு மற்றும் வாழ்வாதாரத்திற்கு நிரந்தர பாதுகாப்பு வழங்க உடனடி நடவடிக்கை எடுப்பதாக மாவட்ட ஆட்சியர் தெரிவித்தார்

# நாகாத்தாள் கோவில் அம்மன் ஊர்வலம்!


திருப்பூர், ஆக. 05–

திருப்பூர் நெருப்பெரிச்சல், ஜேஜே நகர், திருநங்கைகள் காலனி ஸ்ரீ நாகாத்தாள் அருள்மிகு ஸ்ரீ சமயபுரத்தாள் கோவிலில் 16–ம் ஆண்டு பொங்கல் விழா கடந்த 1 ஆம் தேதி தொடங்கியது. நேற்று முன்தினம் பால் குடம், தீர்த்த குடம் எடுத்தல் ஆகியவை நடந்தது. இந்த நிலையில் நேற்று காலை பொங்கல் மாவிளக்கு முளைப்பாரி, மாலை அம்மன் ஊர்வலம், அலகு குத்தி பூ சட்டி எடுத்தல் ஆகியவை நடைபெற்றது. பக்தர்கள் பலர் 17 அடி நீளம் வரையிலான அலகு குத்தினர்.

இதில் ஏராளமான திருநங்கைகள் மற்றும் பக்தர்கள் கலந்து கொண்டனர். மேலும் சாமி வேடம் அணிந்து மேளதாளம் முழங்க நடனம் ஆடியும் வந்தனர். ஊர்வலம் கோவிலில் இருந்து திருநங்கைகள் அடுக்குமாடி குடியிருப்பு வரை சென்றது.



இதற்கான ஏற்பாடுகளை திருநங்கைகள் சங்க தலைவிகள் அய்யம்மாள், திவ்யா மற்றும் பலர் செய்தனர்.



## சினிமா துளிகள்..!

## பிரபல வில்லன் நடிகர் பிரதீப் ராவத் காலமானார்!



மும்பை, ஆக. 05–

'கஜினி', 'வீரம்' போன்ற திரைப்படங்களில் வில்லனாக நடித்துப் புகழ்பெற்ற நடிகர் பிரதீப் ராவத், ரத்தப் புற்றுநோய் காரணமாக காலமானார். அவருக்கு வயது 74.

## மோகன்லால் மகளின் முதல் படம்.. துடக்கம் டிரெய்லர் வெளியீடு!



மோகன்லால் தனது மகள் விஸ்மயா–வை மோகன்லால் சினிமாவில் களம் இறக்கி உள்ளார். ஆசீர்வாத் சினிமாஸ் சார்பில் ஆண்டனி பெரும்பாவூர் தயாரிப்பில் விஸ்மயா நடித்துள்ள முதல் படத்தை இயக்குநர் ஜூட் ஆண்டனி ஜோசப் இயக்கியுள்ளார். இப்படத்திற்கு, 'துடக்கம்' எனப் பெயரிடப்பட்டது. பிளாக்பஸ்டர் திரைப்படமான '2018' ஐ இயக்கியவர் இந்த ஜூட் ஆண்டனி.

இந்த படத்தில் விஸ்மயா மோகன்லாலுடன் ஆஷிஷ் ஜோ ஆண்டனி, சாய்குமார், சித்திக், மனோஜ் கே. ஜெயன் மற்றும் ஜாபர் இடுக்கி உள்ளிட்டோர் நடித்துள்ளனர்.

தாமஸ் ஸ்காரியா என்ற ஐபிஎஸ் கதாபாத்திரத்தில் மோகன்லால் சிறப்பு தோற்றத்தில் நடித்துள்ளார். பிரபல பின்னணி இசையமைப்பாளர் ஜேக்ஸ் பிஜாய் இப்படத்துக்கு இசையமைத்துள்ளார்.

ஜோமோன் டி. ஜான் ஒளிப்பதிவு செய்ய, சாமன் சாக்கோ படத்தொகுப்பு பணிகளை மேற்கொண்டுள்ளார்.

மார்ஷியல் ஆர்ட்ஸ் உள்ளிட்ட தற்காப்புக் கலைகளில் பயிற்சி பெற்ற விஸ்மயா, இப்படத்தின் சண்டைக் காட்சிகளில் டூப் போடாமல் சொந்தமாக நடித்துள்ளார்.

பெங்களூரு, குட்டிக்கானம் மற்றும் கொச்சி ஆகிய பகுதிகளில் இதன் படப்பிடிப்பு நடத்தப்பட்டுள்ளது

'துடக்கம்' படம் வரும் ஆகஸ்ட் 7ம் தேதி வெளியாகவுள்ளது. இந்த நிலையில், துடக்கம் படத்தின் டிரெய்லர் வெளியாகியுள்ளது.

# பழனியில் தமிழக வெற்றி கழகத்தினர் ஆர்ப்பாட்டம்!




பழனி, ஆக. 05–

பழனியில் திண்டுக்கல் மேற்கு மாவட்ட தமிழக வெற்றி கழகம் சார்பில், முதல்வர் விஜய் குறித்து அவதூறாக பேசியதாக, சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலினை கண்டித்து, ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதற்கு மேற்கு மாவட்ட தலைவர் கார்த்திக் ராஜா தலைமை தாங்கினார். நகரச் செயலாளர் மிதுன் மனோகரன், மாவட்ட செயற்குழு உறுப்பினர் பழனி பாலன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் மாவட்ட இணை செயலாளர் சிவா, மாவட்ட துணை செயலாளர் நாகராஜ், நிர்வாகிகள் ஜே பி எஸ் சஞ்சய் உள்பட ஏராளமானோர் பங்கேற்றனர். ஆர்ப்பாட்டத்தில் தமிழக வெற்றி கழகம் மகளிர் அணியினர் உள்பட கட்சியினர், உதயநிதி ஸ்டாலினை கண்டித்து கோஷம் போட்டனர். பின்பு பழனி டவுன் காவல் நிலையத்தில் இன்ஸ்பெக்டர் முனியசாமியிடம் புகார் மனு அளித்தனர்.

# மீனாட்சி அம்மன் கோயில் ரூ.60 கோடி நில மோசடி... அரசு அதிகாரி கைது!

மதுரை, ஆக. 05–

மீனாட்சி அம்மன் மற்றும் அறக்கட்டளைக்கு வழங்கப்பட்ட ரூ.60 கோடி




கள்ளழகர் கோயில்களின் பூஜை,தர்மகாரியங்களுக்காக மதிப்புள்ள 1.79 ஏக்கர் நிலம் போலி ஆவணங்கள் மூலம் முறைகேடாக பட்டா மாற்றம் செய்யப்பட்டு அபகரிக்கப்பட்டதாகக் கூறப்படும் வழக்கில், தற்போது ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளராக (நில எடுப்பு பிரிவு) பணியாற்றி வரும் அன்பழகனை மத்திய குற்றப்பிரிவு போலீஸார் கைது செய்துள்ளனர். இந்த வழக்கில் ஏற்கனவே இருவர் கைது செய்யப்பட்ட நிலையில், இதுவரை மொத்தம் 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். 19 பேர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டு, தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது.

# பி.எட்., எம்.எட். கல்லூரிகளுக்கு அலர்ட்..!



சென்னை, ஆக. 05–

ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்துடன் இணைப்பு அங்கீகாரம் பெற்றுள்ள பி.எட்., எம்.எட். கல்வியியல் கல்லூரிகள், 20272028 கல்வியாண்டிற்கான புதிய மற்றும் தொடர் இணைப்பு அங்கீகாரம் பெற விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக இணையதளம் மூலம் உரிய கட்டணத்தை செலுத்தி அக்டோபர் 31, 2026–க்குள் விண்ணப்பிக்க வேண்டும். குறிப்பிட்ட தேதிக்குள் விண்ணப்பிக்காதவர்கள் அபராத கட்டணத்துடன் டிசம்பர் 10, 2026 வரை விண்ணப்பிக்க அனுமதிக்கப்படுவார்கள்.

**முக்கிய அம்சங்கள்:**

பி.எட்., எம்.எட். கல்லூரிகளுக்கு பொருந்தும்
2027–28 கல்வியாண்டிற்கான அங்கீகாரம்
விண்ணப்பிக்க கடைசி நாள் 31.10.2026
அபராதத்துடன் இறுதி அவகாசம் 10.12.2026.

# தமிழ்நாடு திறந்தநிலை பல்கலை. சேர்க்கை அவகாசம் நீட்டிப்பு...!

சென்னை, ஆக. 05–

தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகத்தின் 202627 கல்வியாண்டு மாணவர் சேர்க்கைக்கான ஆன்லைன் விண்ணப்ப கடைசி தேதி செப்டம்பர் 15 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழகத்தில் இளங்கலை, முதுகலை, டிப்ளமா மற்றும் சான்றிதழ் படிப்புகளுக்கு மாணவர்கள் விண்ணப்பிக்கலாம். பாடப்பிரிவுகள், கட்டணம் மற்றும் சேர்க்கை தொடர்பான விவரங்கள் பல்கலைக்கழக இணையதளத்தில் கிடைக்கும்.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது
சென்னை
Ph: 98659 88881




# வேலை வாய்ப்பு

## ரயில்வேயில் 4,098 நிரந்தர வேலைவாய்ப்புகள்!

ஜூனியர் இன்ஜினியர் உள்ளிட்ட பணிகளுக்கு ஆன்லைனில் விண்ணப்பங்கள் வரவேற்பு
நிறுவனம்: ரயில்வே ஆட்சேர்ப்பு வாரியம் (RRB)
அறிவிப்பு எண்: CEN 04/2026
பணியின் வகை: மத்திய அரசு வேலை
பணியிடம்: இந்தியா முழுவதும்
பணியின் தன்மை: நிரந்தர பணி
காலியிடங்கள்
ஜூனியர் இன்ஜினியர் (Junior Engineer)
டெப்போ மெட்டீரியல் சூப்பரிண்டெண்ட் (Depot Material Superintendent)
கெமிக்கல் & மெட்டலர்ஜிக்கல் அசிஸ்டென்ட் (Chemical & Metallurgical Assistant)
மொத்த காலியிடங்கள்: 4,098
விண்ணப்ப விவரங்கள்
ஆன்லைன் விண்ணப்பம் தொடக்கம்: 14.08.2026
விண்ணப்பிக்க கடைசி நாள்: 13.09.2026
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
அதிகாரப்பூர்வ இணையதளம்: www.rrbapply.gov.in
தேர்வு முறை
கணினி வழித் தேர்வு (CBT–I & CBT–II)
ஆவணச் சரிபார்ப்பு
மருத்துவப் பரிசோதனை

## இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிமிடெட் (HAL) வேலைவாய்ப்பு 2026

நிறுவனம்: இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிமிடெட் (HAL)
அறிவிப்பு எண்: HAL/CHRC–TM/RECT–01/2026 (22.07.2026)
வேலை வகை: மத்திய அரசு நிரந்தர பணி
பணியிடம்: இந்தியா முழுவதும்
காலியிடங்கள்: 30
பணியிடங்கள்:
மேலாளர் (வடிவமைப்பு) Manager (Design)
நிதி அலுவலர் Finance Officer
துணை மேலாளர் (நிதி) Deputy Manager (Finance)
விண்ணப்பம் தொடக்கம்: 22.07.2026
கடைசி தேதி: 12.08.2026
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
அதிகாரப்பூர்வ இணையதளம்:
https://halcorp.formflix.com/

## இந்திய ராணுவத்தில் வேலைவாய்ப்பு 2026

நிறுவனம்: இந்திய ராணுவம் (Indian Army)
வேலை வகை: மத்திய அரசு நிரந்தர பணி
பணியின் பெயர்: SSC (JAG) Entry 125வது பாடநெறி
காலியிடங்கள்: 10
பணியிடம்: இந்தியா முழுவதும்
விண்ணப்பம் தொடக்கம்: 17.07.2026
விண்ணப்பிக்க கடைசி நாள்: 17.08.2026
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
அதிகாரப்பூர்வ இணையதளம்:
https://www.joinindianarmy.nic.in/

## TNWEC வேலைவாய்ப்பு 2026; 8 பணியிடங்கள்

நிறுவனம்: தமிழ்நாடு வனவெளி அனுபவக் கழகம் (Tamil Nadu Wilderness Experiences Corporation – TNWEC)
வேலை வகை: தமிழ்நாடு அரசு வேலை
பணியமர்த்தும் முறை: ஒப்பந்த அடிப்படை (Contract Basis)
மொத்த காலியிடங்கள்: 08
பணியிடம்: சென்னை
பணியிடங்கள்:
நிர்வாக அலுவலர் (Administrative Officer)
தொழில்நுட்ப இணை (Associate Technical)
திட்ட ஒருங்கிணைப்பாளர் (Project Co–ordinator)
கணக்கு உதவியாளர் (Accounts Assistant)
திட்ட இணை விற்பனை (Project Associate Sales)
இலக்கு மைய மேலாளர் (Destination Manager)
விண்ணப்பம் தொடக்கம்: 24.07.2026
விண்ணப்பிக்க கடைசி நாள்: 09.08.2026
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
அதிகாரப்பூர்வ இணையதளம்:: https://tnwec.com/

## காரைக்குடி CECRI–யில் அப்ரண்டிஸ் பயிற்சிக்கு வேலைவாய்ப்பு

நிறுவனம்: சிஎஸ்ஐஆர் மத்திய மின் வேதியியல் ஆராய்ச்சி நிறுவனம் (CSIRCECRI), காரைக்குடி
அறிவிப்பு எண்: 07–18(02)/2010–R&C
வேலை வகை: மத்திய அரசு வேலை
பணியமர்த்தும் முறை: அப்ரண்டிஸ் பயிற்சி (1 ஆண்டு)
காலியிடங்கள்: 27
பணியிடம்: காரைக்குடி
கல்வித் தகுதி:
8ஆம் வகுப்பு
ஐ.டி.ஐ (ITI)
டிப்ளமோ
பி.இ / பி.டெக் (B.E./B.Tech)
ஏதேனும் ஒரு பட்டப்படிப்பு
நேர்முகத் தேர்வு: 10.08.2026 (திங்கட்கிழமை) காலை 9.00 மணி
விண்ணப்பிக்கும் முறை: ஆஃப்லைன்
அதிகாரப்பூர்வ இணையதளம்:
https://www.cecri.res.in/

## திருச்சி மாவட்ட சுகாதாரச் சங்கத்தில் 30 பணியிடங்கள்

நிறுவனம்: திருச்சிராப்பள்ளி மாவட்ட சுகாதாரச் சங்கம் (District Health Society – DHS)
வேலை வகை: தமிழ்நாடு அரசு வேலை
பணியமர்த்தும் முறை: ஒப்பந்த அடிப்படை (Contract Basis)
பணியின் பெயர்: பல்நோக்கு சுகாதாரப் பணியாளர் / சுகாதார ஆய்வாளர் தரம்II (Multipurpose Health Worker / Health Inspector Gr–II)
மொத்த காலியிடங்கள்: 30
பணியிடம்: திருச்சி
விண்ணப்பம் தொடக்கம்: 22.07.2026
விண்ணப்பிக்க கடைசி நாள்: 07.08.2026
விண்ணப்பிக்கும் முறை: ஆஃப்லைன்
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://tiruchirappalli.nic.in/

## இன்றைய கார்ட்டூன்




# எதிர்க்கட்சிகள் அமளி: மக்களவை ஒத்திவைப்பு!

புதுடெல்லி, ஆக. 05–



நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் கடந்த மாதம் 20–ந்தேதி தொடங்கியது. கூட்டத்தொடர் தொடங்கிய நாளில் இருந்தே நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் கடும் அமளி ஏற்பட்டு வருகிறது. மக்களவையில் கேள்வி நேரம் இதுவரை நிறைவு செய்யப்படவில்லை.

இந்த நிலையில் இன்று மக்களவை கூடியபோது, நீட் முறைகேடு விவகாரம், மாணவர் போராட்டங்கள் மீதான போலீஸ் நடவடிக்கை, ராமர் கோவில் நன்கொடை விவகாரம் உள்ளிட்ட பிரச்சினைகளை எழுப்பி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் முழக்கமிட்டனர். இதனால் அவையில் கடும் அமளி ஏற்பட்டது.

அப்போது சபாநாயகர் ஓம் பிர்லா, அவை உறுப்பினர்களை அவரவர் இருக்கைகளில் சென்று அமருமாறும், கேள்வி நேரத்தை நிறைவு செய்ய ஒத்துழைக்குமாறும் கேட்டுக் கொண்டார். மேலும், "நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும், வெளியேயும் கோஷமிடுவது ஜனநாயகத்திற்கு உகந்ததல்ல. இவ்வாறு கோஷமிட்டு, பதாகைகளை காட்டுவதால் அவையின் மாண்பு குறைந்துபோகிறது" என்றார்.

இருப்பினும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தொடர்ந்து கோஷமிடுவதும், அதற்கு பா.ஜ.க. எம்.பி.க்கள் பதிலளித்து கோஷமிடுவதும் என அவையில் கூச்சலும், குழப்பமும் நிலவியதால், தொடர்ந்து அவை நடவடிக்கைகளில் ஈடுபட முடியாமல், மதியம் 2 மணி வரை மக்களவை ஒத்திவைக்கப்படுவதாக சபாநாயகர் ஓம் பிர்லா அறிவித்தார்.

# குஜராத்தை மிரட்டும் சண்டிபுரா வைரஸ் தொற்று.. 22 குழந்தைகள் பலி!

குஜராத், ஆக. 05–



குஜராத் மாநிலத்தில் சண்டிபுரா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டு இதுவரை 22 குழந்தைகள் உயிரிழந்துள்ளதாக மாநில சுகாதாரத்துறை அமைச்சர் பிரபுல் பனஷேரியா தெரிவித்துள்ளார்.

ஜூலை முதல் வாரத்தில் இருந்து இந்த வைரஸ் குஜராத்தில் பரவி வருகிறது.

தரவுகளின்படி, குஜராத்தில் இதுவரை 184 பேருக்குச் சண்டிபுரா வைரஸ் பாதிப்பு இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்பட்டு பரிசோதிக்கப்பட்டது. அதில் 35 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

தொற்று உறுதியானவர்களில் 7 பேர் அரசு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். 6 பேர் தொற்றிலிருந்து குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். ஆகஸ்ட் 3 நிலவரப்படி மேலும் 11 பேரின் மருத்துவப் பரிசோதனை முடிவுகள் வர வேண்டியுள்ளன. பாதிக்கப்பட்ட அனைவரும் 15 வயதிற்குட்பட்ட குழந்தைகள் ஆவர். இந்தத் தொற்று குறிப்பிட்ட ஒரு கிராமத்திற்கோ அல்லது பகுதிக்கு மட்டும் வரையறுக்கப்படவில்லை; மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலும் பரவியுள்ளது.

'சண்டிபுரா என்செபாலிடிஸ்' என்று அழைக்கப்படும் சண்டிபுரா வைரஸ் என்பது மூளையைத் தாக்கி அழற்சியை உண்டாக்கும் ஒரு ஆபத்தான வைரஸ் தொற்றாகும்.

ஈக்கள் மற்றும் டெங்குவை பரப்பும் ஏடீஸ் கொசுக்கள் உள்ளிட்ட பகல் நேரத்தில் கடிக்கும் கொசுக்கள் மூலம் இந்த வைரஸ் மனிதர்களுக்குப் பரவுகிறது.

காய்ச்சல், வாந்தி, மயக்கம், வலிப்பு, வயிற்றுப்போக்கு, நரம்பியல் பிரச்சினைகள் மற்றும் மூளை வீக்கம் போன்றவை இதன் முக்கிய அறிகுறிகளாகும்.

சண்டிபுரா வைரஸ் தொற்றைத் தடுக்கவோ அல்லது குணப்படுத்தவோ தற்போது பிரத்யேக தடுப்பூசியோ அல்லது மருந்தோ இல்லை. எனவே, குழந்தைகளுக்குக் காய்ச்சல், வாந்தி, வலிப்பு அல்லது நரம்பியல் சார்ந்த உடல்நலக்குறைவு அறிகுறிகள் தென்பட்டால், பெற்றோர்கள் சிறிதும் தாமதிக்காமல் உடனடியாக அருகில் உள்ள அரசு மாவட்ட மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல வேண்டும் என சுகாதாரத்துறை அமைச்சர் கேட்டுக்கொண்டுள்ளார்.

# ரெப்போ வட்டி மாற்றமில்லை! ஆர்பிஐ!!

புதுடில்லி, ஆக. 05–




வங்கிகளின் குறுகிய கால கடன்களுக்கான ரெப்போ வட்டி விகிதத்தில் எந்தவித மாற்றமில்லை. 5.25 சதவீதமாகவே நீடிக்கும் என ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது.

வங்கிகளுக்கு ரிசர்வ் வங்கி வழங்கும் கடனுக்கு விதிக்கப்படும் வட்டி விகிதம் ரெப்போ வட்டி விகிதம். இரு மாதங்களுக்கு ஒருமுறை ரிசர்வ் வங்கி அதிகாரிகள் கூடி, ரெப்போ வட்டி விகிதம் குறித்து முக்கிய முடிவுகள் எடுக்கும். அதன்படி, ரெப்போ வட்டி விகிதம் குறித்த அறிவிப்பை ரிசர்வ் வங்கி இன்று வெளியிட்டுள்ளது.

அதாவது, ரெப்போ வட்டி விகிதத்தில் எந்தவித மாற்றமில்லை. ரெப்போ வட்டி விகிதம் 5.25 சதவீதமாக தொடரும் என ரிசர்வ் வங்கி கவர்னர் சஞ்சய் மல்ஹோத்ரா அறிவித்துள்ளார். இதனால் வீடு, வாகனக் கடன் வட்டி விகிதத்தில் மாற்றம் இருக்க வாய்ப்பில்லை.

மேலும், அவர் கூறியதாவது; 2026–27 நிதியாண்டிற்கான உண்மையான ஜிடிபி வளர்ச்சி கணிப்பு 6.7 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. இது முன்பு கணிக்கப்பட்ட 6.6 சதவீதத்தை விட சற்று அதிகமாகும். முதல் காலாண்டிற்கான பணவீக்கக் கணிப்பு எதிர்பார்க்கப்பட்டதை விடக் குறைவாக உள்ளது. அதாவது, பணவீக்கம் தற்போது 5 சதவீதமாக கணிக்கப்பட்டுள்ளது. இது முன்பு எதிர்பார்க்கப்பட்ட 5.1 சதவீதத்தை விட குறைவானதாகும். இவ்வாறு அவர் கூறினார்.

# ரூ.2,000 கோடி முதலீடு... இந்தியாவின் கப்பல் தலைநகரமாகும் தூத்துக்குடி!

தூத்துக்குடி, ஆக. 05–




தமிழ்நாட்டின் தூத்துக்குடி மாவட்டம், இந்தியாவின் முக்கிய கப்பல் கட்டுமான மையமாக உருவெடுக்கும் நிலையில், பொதுத்துறை நிறுவனமான கொச்சின் ஷிப்யார்டு லிமிடெட் (Cochin Shipyard Ltd.) சுமார் ₹2,000 கோடி முதலீடு செய்ய திட்டமிட்டுள்ளது.

இதற்காக, வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தில் கப்பல் கட்டும் மற்றும் பழுதுபார்க்கும் தளத்தை அமைக்க 49 ஹெக்டேர் நிலம் மற்றும் 7 ஹெக்டேர் நீர்ப்பரப்பை 30 ஆண்டுகள் குத்தகைக்கு எடுக்க நிறுவனம் அதிகபட்ச ஏலதாரராக தேர்வாகியுள்ளது. இந்த திட்டத்தின் மூலம் சிறிய கடற்கரை கப்பல்கள் மற்றும் கடல்சார் உபகரணங்கள் தயாரிக்கப்படும்.

ஏற்கனவே தென்கொரியாவின் HD Hyundai Heavy Industries நிறுவனமும் தூத்துக்குடியில் கப்பல் கட்டும் திட்டத்தை முன்னெடுத்து வரும் நிலையில், இந்த புதிய முதலீடு மாவட்டத்தின் தொழில் வளர்ச்சிக்கு மேலும் வலுசேர்க்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மத்திய அரசின் கப்பல் கட்டுமான மேம்பாட்டு திட்டத்தின் ஒரு பகுதியாக நடைபெறும் இந்த முதலீடு, ஆயிரக்கணக்கான நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்புகளை உருவாக்கும் என நம்பப்படுகிறது. இதன் மூலம் தூத்துக்குடி இந்தியாவின் முன்னணி கப்பல் கட்டுமான மற்றும் பழுது பார்க்கும் நகரமாக வளர்ந்து, மாவட்டத்தின் பொருளாதார வளர்ச்சிக்கும் புதிய அடையாளத்தையும் உருவாக்கும் என தொழில்துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# டெல்லி கலவரம்: ஏஐ போலி வீடியோக்கள் பரப்பிய 200+ இன்புளுயன்சர்கள் விசாரணை வளையத்தில்!

புதுடெல்லி, ஆக. 05–




டெல்லி போராட்டம் தொடர்பாக ஏஐ மூலம் உருவாக்கப்பட்ட போலி வீடியோக்கள் மற்றும் வதந்திகளை சமூக வலைதளங்களில் பரப்பியதாக 200–க்கும் மேற்பட்ட இன்புளுயன்சர்கள், யூடியூபர்களிடம் போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். வெளிநாடுகளில் இருந்து செயல்பட்ட பல சமூக வலைதள கணக்குகள் முடக்கப்பட்டுள்ளன. போராட்ட வன்முறை தொடர்பான டிஜிட்டல் ஆதாரங்கள், சர்வர்கள் மற்றும் சமூக ஊடக செயல்பாடுகள் தீவிரமாக ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன.

# பூமர்ஸ் காலம் முடிவா? ஜென் Z கையில் கார்ப்பரேட் நிர்வாகம்!

சென்னை, ஆக. 05–





இந்திய கார்ப்பரேட் துறையில் இளம் தலைமுறையினரின் பங்களிப்பை அதிகரிக்கும் வகையில் முக்கியமான மாற்றம் ஒன்று பரிந்துரைக்கப்பட்டுள்ளது. நிறுவனங்களின் மேனேஜிங் டைரக்டர் (MD) மற்றும் முழுநேர டைரக்டர்பதவிகளுக்கான குறைந்தபட்ச வயது வரம்பை 21–ல் இருந்து 18 ஆக குறைக்க நாடாளுமன்ற குழு பரிந்துரை செய்துள்ளது. இந்த பரிந்துரைக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்தால் மட்டுமே புதிய விதி அமலுக்கு வரும். தற்போது இந்திய நிறுவனங்களின் நிர்வாகக் குழுக்களில் பெரும்பாலும் மூத்த தலைமுறையினர் இடம்பெற்று வரும் நிலையில், ஜென் Z தலைமுறையினருக்கு அதிக வாய்ப்பு வழங்குவதே இந்த பரிந்துரையின் நோக்கமாக கூறப்படுகிறது. புதிய விதி அமலானால், 18 வயது நிரம்பிய ஒருவர் நிறுவனம் தொடங்குவது மட்டுமல்லாமல், பங்குகளை வைத்திருப்பது, நிர்வாகக் குழுவில் உறுப்பினராக செயல்படுவது மற்றும் மேனேஜிங் டைரக்டர் உள்ளிட்ட உயர்பதவிகளை வகிப்பதற்கும் சட்டரீதியான வாய்ப்பு கிடைக்கும்.

இந்தியாவில் வேகமாக வளர்ந்து வரும் ஸ்டார்ட்அப் சூழல் மற்றும் இளம் தொழில்முனைவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதை கருத்தில் கொண்டு இந்த பரிந்துரை முன்வைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் நிறுவன நிர்வாகத்தில் புதிய சிந்தனைகள், புதுமையான முடிவுகள் மற்றும் இளம் தலைமுறையின் குரல் அதிகமாக பிரதிபலிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. கார்ப்பரேட் நிர்வாகத்தில் ஜென் Z தலைமுறைக்கு அதிக இடம் கிடைக்கும் முக்கிய மாற்றமாக இந்த பரிந்துரை பார்க்கப்படுகிறது.

# டிஜிட்டல் பரிவர்த்தனைக்கு வணிகர்களுக்கு மீண்டும் கட்டணம்?

புதுடில்லி, ஆக. 05–






வெளிநாட்டு முதலீடுகளை அதிகம் ஈர்ப்பதற்கும், நம் நாட்டை உலகளாவிய உற்பத்தி மையமாக மாற்றுவதற்கும் தேவையான பல்வேறு வரி சலுகைகளை உள்ளடக்கிய, 'வரி மற்றும் பிற சட்டங்கள் திருத்த மசோதா– 2026' நேற்று லோக்சபாவில் தாக்கல் செய்யப்பட்டது. மேலும், மின்னணு பணப் பரிவர்த்தனைகளுக்கான கட்டண விலக்கு வழங்குவதில், மத்திய அரசுக்கு அதிகாரம் வழங்கவும் மசோதா வகை செய்கிறது.

மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் நேற்று லோக்சபாவில் தாக்கல் செய்த இந்த மசோதாவின் முக்கிய அம்சங்கள்:

* மின்னணு பணப் பரிவர்த்தனை முறைகளுக்கு வணிகர்களிடமிருந்து வசூலிக்கப்படும் கட்டண முறைகளில் விலக்கு அளிப்பதை மத்திய அரசு தீர்மானிக்கலாம்
* நீண்ட காலமாக அமலில் உள்ள, 'பூஜ்ஜியம் கட்டண' கொள்கை குறித்த விவாதத்தை, இது மீண்டும் தீவிரப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது
* தற்போதைய கட்டண விலக்கு நடைமுறையால் பணப் பரிவர்த்தனை செயலாக்க செலவுகளை மீட்டெடுப்பது சிரமமாக இருப்பதாக வங்கிகள், பணப் பரிவர்த்தனை நிறுவனங்கள் நீண்ட காலமாக வலியுறுத்தும் நிலையில் மாற்றம் வருகிறது.
* பெரிய வணிகர்களின் யு.பி.ஐ., எனப்படும் டிஜிட்டல் பணப்பரிவர்த்தனைகளுக்கு கட்டணத்தை அனுமதிக்க நிதியமைச்சகமும், ரிசர்வ் வங்கியும் பரிசீலித்து வருவதாக வெளியான தகவலை அரசு மறுத்திருந்த நிலையில், தற்போது மசோதாவில் அது சேர்க்கப்பட்டுள்ளது.
* வெளிநாட்டு முதலீட்டு நிதிகளின் மேலாளர்கள் இந்தியாவில் இருந்து செயல்படுவதற்கான விதிமுறைகள் எளிமையாகின்றன
* நம் நாட்டில் இருந்து பணியாற்றினாலும், அந்த வெளிநாட்டு முதலீட்டு நிதி இந்தியாவில் வணிகம் செய்வதாக கருதப்படாது
* ஒப்பந்த அடிப்படையில், 'மொபைல் போன்'கள், மடிக்கணினிகள், 'டேப்லெட்'கள், 'சர்வர்'களை இந்தியாவில் தயாரிக்க, இயந்திரங்கள் மற்றும் கருவிகளை வழங்கும் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு வருமான வரி விலக்கு, 2040 – –41 வரை நீட்டிப்பு
* மின்னணு சாதனங்கள் உற்பத்திக்கு தேவையான உதிரிபாகங்களை இந்திய சுங்க கிடங்குகளில் சேமித்து, ஒப்பந்த உற்பத்தியாளர்களுக்கு வழங்கும் வெளிநாட்டு நிறுவனங்களுக்கும், 15 ஆண்டுகள் வருமான வரி விலக்கு
* இந்திய தரவு மையங்களை பயன்படுத்தும் வெளிநாட்டு 'கிளவுட்' நிறுவனங்களுக்கு இருந்த பல்வேறு அரசு அனுமதி நடைமுறைகள் நீக்கம்
* தரவு மையங்களை நேரடி உரிமையில் மட்டுமல்லாமல், குத்தகை அடிப்படையிலும் இயக்க அனுமதி; இதனால், ஏ.ஐ., எனப்படும் செயற்கை நுண்ணறிவு தரவு மையங்களில் அதிக முதலீடுகள் வர வாய்ப்பு.




புதுதில்லியில் முதல்வர் ரேகா குப்தாவை மரியாதை நிமித்தமாக நேரில் சந்தித்து பேசிய விஐடி வேந்தர் கோ.விசுவநாதன்.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020